©
தமிழ்நாடு அரசு
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 4.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 52] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 31, 2025
மார்கழி 16, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு 2056.

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண். 93, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (K2)த் துறை, 29 ஆகஸ்டு 2025.]*

1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) 49 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் மேற்கொள்கிறார். மேலும் மேற்சொன்ன சட்டத்தின் 49 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, இதன் வரைவு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்.**

மேற்சொன்ன விதிகளில்.–

(1) விதி 16–C க்குப் பின்னர், பின்வரும் விதி சேர்த்து கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

“16–D. ஆண்டு கணக்கு விவர அறிக்கை – ஒரு நிறுவனத்தின் ஒவ்வொரு வேலையளிப்பவரும், 47–A ஆம் பிரிவின் கீழ் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கையை, படிவம்–ZC–ல் தொழிலாளர் துறையின் குறிப்பிட்ட வலைவாசல் வாயிலாக, நிறுவனம் அமைந்துள்ள பகுதியின் ஆய்வாளரிடம் ஆண்டுதோறும் ஜனவரி 31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் அளிக்க வேண்டும்.”

(2) படிவம்–ZB க்குப் பின்னர், பின்வரும் படிவம் சேர்த்து கொள்ளப்பட வேண்டும், அதாவது:

படிவம்–ZC

[விதி 16–D ஐக் காண்க]

**31.12.20............. ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை**

| | | |
|---|---|---|
| 1. | நிறுவனத்தின் பெயர் | |
| 2. | நிறுவனத்தின் முழு அஞ்சல் முகவரி, தொலைபேசி எண், தொலைநகல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | |
| 3. | பதிவுபெற்ற அலுவலகத்தின் / தலைமை அலுவலகத்தின் முழு அஞ்சல் முகவரி, தொலைபேசி எண், தொலைநகல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | |
| 4. | பதிவுச் சான்றிதழ் எண். | |

| | | |
|---|---|---|
| 5. | வேலையளிப்பவரின் / உரிமையாளரின் / நிறுவனத் தலைவரின்/ பங்குதாரரின் / முதன்மை வேலையளிப்பவரின் / ஒப்பந்ததாரரின் பெயர், அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | |
| 6. | மேலாளரின்/அதிகாரம் பெற்ற நபரின் பெயர், அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி | |
| 7. | அந்த ஆண்டில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களின் சராசரி எண்ணிக்கை | |
| | a) ஆண்கள் | |
| | b) பெண்கள் | |
| | c) இளைஞர்கள்/வளரிளம் பருவத்தினர் | |
| | i) ஆண் | |
| | ii) பெண் | |
| | மொத்தம் | |
| 8. | வார விடுமுறை நாள் | |
| 9. | அந்த ஆண்டில் பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை. | |
| 10. | அன்றாடப் பணி நேரம் மற்றும் நிறுவன வளாகத்தினுள் இருக்கும் நேரம் | |
| 11. | வாரம் ஒன்றிற்கு வழக்கமாகப் பணிபுரியும் பணி நேரம் | |
| 12. | மிகை நேர ஊதியங்கள் மற்றும் படிகள் உட்பட வழங்கப்பட்ட சம்பளத்தின்/ஊதியங்களின் மொத்தத் தொகை | |
| 13. | (i) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின், (தமிழ்நாடு சட்டம் 36 / 1947) 20 முதல் 23 வரையிலான பிரிவுகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறாக, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளதா? | |
| | (ii) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) பிரிவு 22–A இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறாக, நிறுவன வளாகத்தில் அனைத்து பணியாளர்களுக்கும் உரிய இருக்கை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதா? | |

14. பணி நீக்கம் / பணியிடைநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| (i) | அந்த ஆண்டில் பணிவிடுவிப்பு செய்யப்பட்ட/பணியறவு செய்யப்பட்ட / பணிநீக்கம் செய்யப்பட்ட/பணி விலகிய / பணி ஓய்வு பெற்ற / இறந்துவிட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | |
| (ii) | வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை | |
| (iii) | அந்த ஆண்டில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட பணியாளார்களின் எண்ணிக்கை | |
| (iv) | வழங்கப்பட்ட பிழைப்பூதியப் படித்தொகை | |

15. ஊதியங்கள்

| | | | |
|---|---|---|---|
| (i) | பிடித்தங்கள் உட்பட வழங்கப்பட்ட மொத்த ஊதியங்கள் | | |
| | a) அடிப்படை ஊதியம் | | |
| | b) அகவிலைப்படி | | |
| | c) மிகை நேர ஊதியம் | | |
| | d) இலாப நோக்கமற்ற மிகை யூதியப் பகிர்வு | | |
| | e) ரொக்கமாக வழங்கப்பட்ட ஏனைய படிகள் | | |
| | f) அந்த ஆண்டில் வழங்கப்பட்ட முந்தைய ஆண்டிற்கான ஊதிய நிலுவைத் தொகை | | |
| (ii) | மாதம் ஒன்றிற்கு ரூ 24000/–க்கு மிகாமல் ஊதியம் பெறும் நபர்களின் எண்ணிக்கை (மத்திய அரசு அறிவிக்கையிடும் போதெல்லாம் மாற்றத்திற்குட்பட்டது)<br>ஆண்கள்.<br>பெண்கள்:<br>இளம்பருவத்தினர்:<br>ஏனையோர்: | | |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பண மதிப்பில் அளிக்கப்பட்ட சலுகை குறித்த விவரங்கள் (Money Value Concession) | | |
| (iv) | ஊதியத்திலிருந்து செய்யப்பட்ட பிடித்தங்களின் விவரங்கள் | | |
| | பிடித்தங்கள் | தொடர்புடைய பணியாளர்களின் எண்ணிக்கை | பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை |
| | அபராதங்கள் | | |
| | சேதங்கள்/இழப்பு | | |
| | ஒப்பந்த மீறல் | | |
| | ஏனையவை | | |
| | மொத்தம் | | |
| (v) | ஊதியம் வழங்கப்பட்ட காலம் | | |
| (vi) | ரொக்கமாக வழங்கப்பட்ட மொத்த ஊதியத் தொகை | | |
| (vii) | பொருளாக வழங்கப்பட்ட ஊதியத்தின் மொத்த ரொக்க மதிப்பு | | |
| (viii) | அபராதத் தொகையிலிருந்து பிரித்து வழங்கப்பட்ட தொகைகள்<br>a)<br>b)<br>c) | நோக்கம் | தொகை |
| (ix) | ஆண்டின் இறுதியில் கையிருப்பிலுள்ள மீத அபராதத் தொகை | | |
| (x) | வசூலிக்கப்பட்ட அபராதங்கள் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியில் செலுத்தப்பட்ட விவரங்கள்<br>a) செலுத்திய முறை<br>b) தொகை | | |
| **16.** | விடுப்பு: | | |
| (i) | ஈட்டிய விடுப்புக்குத் தகுதியுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை | | |
| (ii) | ஈட்டிய விடுப்பு துய்த்த / அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | | |
| (iii) | ஈட்டிய விடுப்புக்குப் பதிலாக ஊதியம் / சம்பளம் பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை | | |
| **17.** | பேறு கால நலன்கள்: | | |
| (i) | **பயன்களுக்கான காரணங்கள்** | பயன்களைப் பெற்ற பணியாளர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மொத்தத் தொகை |
| | a) கருச்சிதைவு | | |
| | b) பேறுகாலம் | | |
| | c) உடல் நலக் குறைவு | | |
| | d) மருத்துவ மிகையூதியம் | | |
| | மொத்தம் | | |
| (ii) | 1961 ஆம் ஆண்டு பேறுகால பயன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1961) 6–ஆம் பிரிவின் கீழ் அறிவிப்பு அளித்த பெண்களின் எண்ணிக்கை | | |
| (iii) | பேறுகால அறிவிப்பு பெற்றதன் பேரில், பணிக்கு வராதிருக்க அனுமதி பெற்ற பெண்களின் எண்ணிக்கை | | |
| (iv) | சம்பந்தப்பட்ட பெண் தவிர வேறு நபர்களுக்கு தொகை வழங்கப்பட்ட நேர்வுகள் | எண்:<br>வழங்கப்பட்ட தொகை: | |
| (v) | மேல்முறையீட்டு அதிகாரியின் அல்லது ஆய்வாளரின் உத்தரவின் பேரில் தொகை வழங்கப்பட்ட நேர்வுகள் | எண்:<br>வழங்கப்பட்ட தொகை: | |

| | | |
|---|---|---|
| (vi) | மறுக்கப்பட்ட பேறுகால பயன் கோரிக்கைகள்: | எண்:<br>வழங்கப்படாத தொகை: |
| (vii) | மறுக்கப்பட்ட மருத்துவ மிகை ஊதியக் கோரிக்கைகள் | எண்:<br>வழங்கப்படாத தொகை: |
| (viii) | கருச்சிதைவு ஏற்பட்டதனால் விடுப்பு கோரி விண்ணப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட நேர்வுகள் | எண்:<br>வழங்கப்படாத தொகை: |
| (ix) | 1961 ஆம் ஆண்டு பேறுகால பயன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1961) 10–ஆம் பிரிவின் கீழ் உடல் நலக்குறைவு காரணமாக கூடுதல் விடுப்பு கோரி விண்ணப்பிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்ட நேர்வுகள் | எண்:<br>வழங்கப்படாத தொகை: |
| (x) | 1961 ஆம் ஆண்டு பேறுகால பயன் சட்டத்தின் (மத்தியச் சட்டம்53/1961) 12 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிற்கான வரம்பு நிபந்தனையின் கீழ், பேறுகால பயன் அல்லது மருத்துவ மிகை ஊதியம் மறுக்கப்பட்ட பெண்கள் | எண்:<br>வழங்கப்படாத தொகை: |
| (xi) | 1961–ஆம் ஆண்டு பேறுகால பயன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1961) 8 ஆம் பிரிவின் கீழ், நிருவாகத்தால் பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பேறுகாலத்திற்குப் பிந்தைய பராமரிப்புகள் இலவசமாக வழங்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | |

18. மிகை ஊதியம் :

| | | | |
|---|---|---|---|
| (i) | மிகை ஊதியம் வழங்கப்பட்டதனால் பயனடைந்த பணியாளர்களின் எண்ணிக்கை | | |
| (ii) | அறிவிக்கப்பட்ட மிகை ஊதியம் விழுக்காடு | | |
| (iii) | வழங்கப்பட்ட மொத்த மிகை ஊதியத் தொகை | | |
| (iv) | தொகை வழங்கப்பட்ட நாள் | | |

19. பணி நிரந்தரம் வழங்குதல்:

| | | |
|---|---|---|
| (i) | 480 நாட்கள் தொடர்ச்சியான பணிக்காலம் நிறைவு செய்துள்ள நிரந்தரமாக்கப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை | |
| (ii) | தொடர்புடைய காலகட்டத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை | |
| (iii) | தொடர்புடைய காலகட்டத்தில் பணி நிரந்தரம் செய்யப்படவிருக்கிற தொழிலாளர்களின் எண்ணிக்கை | |
| (iv) | கால தாமதத்திற்கான காரணங்கள் | |

20. ஒப்பந்தத் தொழிலாளர்கள்

| | | |
|---|---|---|
| (i) | ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் | |
| (ii) | ஒப்பந்தக் காலம் | |
| (iii) | பணியின் தன்மை | |
| (lV) | ஒவ்வொரு ஒப்பந்தக்காரராலும் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் உயரளவு எண்ணிக்கை | |
| (V) | பணிபுரிந்த நாட்களின் எண்ணிக்கை | |
| (vi) | பணிபுரிந்த மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை | |

21. மாநிலத்திற்கிடையே புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்:

| | | |
|---|---|---|
| (i) | சொந்த மாநிலத்தில் உள்ள ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் | |
| (ii) | தொழிலாளர் பணிபுரியும் மாநிலத்தில் (தமிழ்நாடு) முதன்மை வேலையளிப்பவரின் பெயர் | |
| (iii) | ஒப்பந்தக் காலம் | |
| (iv) | புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்ட வேலையின் / செயல்பாடுகளின் தன்மை | |
| (V) | ஒவ்வொரு ஒப்பந்தக்காரராலும் பணியமர்த்தப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உயரளவு எண்ணிக்கை | |

| | | |
|---|---|---|
| (vi) | வேலை நாட்களின் எண்ணிக்கை | |
| (vii) | பணிபுரிந்த மனித உழைப்பு நாட்களின் எண்ணிக்கை | |
| (viii) | இடம் பெயர்வுக்கென வழங்கப்பட்ட படி | |
| (ix) | வெளியில் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் வழங்கப்பட்ட படி | |
| (x) | வெளியில் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் வழங்கப்பட்ட ஊதியத் தொகை | |

மேலே அளிக்கப்பட்ட தகவல்கள் நான் / நாங்கள் நன்கு அறிந்தவரையில் உண்மை என்றும், மேலும் தகவல் ஏதேனும் தவறானது என மெய்ப்பிக்கப்படும் நேர்வில், அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு நான் / நாங்கள் பொறுப்பாவேன் / பொறுப்பாவோம் என்றும் இதனால் சான்றளிக்கிறேன் / சான்றளிக்கிறோம்.

வேலையளிப்பவரின்/கையொப்பமிடுவதற்கு
அதிகாரம் பெற்ற நபரின் பெயர் மற்றும் கையொப்பம்

இடம்:

நாள்:

அலுவலக முத்திரை

*[அரசாணை (நிலை) எண். 100, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (M2)த் துறை, 9 செப்டம்பர் 2025.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தத்திற்கான கீழ்க்காணும் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர், பின்வரும் வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், யாதொரு நபரிடமிருந்து வரப்பெறும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை எண் 47/1, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி சென்னை—32 என்ற முகவரியில் உள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் வாயிலாக, அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை — 600 009' என்ற முகவரிக்கு இரு படிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில், விதி 95—இல்,

(1) விவர அட்டவணை II இல், பத்தி 3—இல்,

(a) “பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை” என்ற தலைப்புக்குப் பதிலாக, “கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை” என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) “யாதொரு பெண்ணும்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்” என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(2) விவர அட்டவணை III இல், பத்தி 3—இல்,

(a) “பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை” என்ற தலைப்புக்குப் பதிலாக, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) “யாதொரு பெண்ணும்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்” என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(3) விவர அட்டவணை IV இல் பத்தி 4—இல்,

(a) “பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை” என்ற தலைப்புக்குப் பதிலாக, “கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை” என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) “யாதொரு பெண்ணும்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்” என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(4) விவர அட்டவணை VI இல் பத்தி 4–இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை ‘‘என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(5) விவர அட்டவணை VII இல், பத்தி1–இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(6) விவர அட்டவணை VIII இல், பத்தி 10 –இல்,

(a) ‘‘இளையோர் பணியமர்த்தப்படுவதில் கட்டுப்பாடும் பெண்கள் பணியமர்த்தப்படுவதை தடைசெய்தலும்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘இளையோர் பணியமர்த்தப்படுவதில் கட்டுப்பாடும் கர்ப்பிணிப் பெண்கள் பணியமர்த்தப்படுவதை தடைசெய்தலும்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(7) விவர அட்டவணை XI இல், பத்தி 2–இல்,

(a) ‘‘பெண்கள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(8) விவர அட்டவணை XII இல், பத்தி 4–இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(9) விவர அட்டவணை XIII இல், பத்தி 2–இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(10) விவர அட்டவணை XIV இல், பத்தி 2–இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(11) விவர அட்டவணை XV இல், பத்தி 5–இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(12) விவர அட்டவணை XVI இல், பகுதி IX–இல்,

(a) ‘‘18 வயதுக்குட்பட்ட இளையோர் மற்றும் பெண்கள் பணியமர்த்தப்படுவதில் கட்டுப்பாடுகள்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘18 வயதுக்குட்பட்ட இளையோர் மற்றும் கர்ப்பிணிப்பெண்கள் பணியமர்த்தப்படுவதில் கட்டுப்பாடுகள்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) (1) ஆம் பத்தியில் ‘‘பெண்கள்’’ என்ற சொற்றொடர் இடம்பெறும் இடங்களிலெல்லாம், ‘‘கர்ப்பிணிப் பெண்கள்’’ என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(13) விவர அட்டவணை XVII இல், பத்தி 2—இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) ‘‘யாதொரு பெண்களும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்களும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(14) விவர அட்டவணை XXII இல், பத்தி 4—இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல் தொடர்பான’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல் தொடர்பான’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) யாதொரு பெண்ணும் என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(15) விவர அட்டவணை XXIII இல், பத்தி 15—இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுதல்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுதல்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(16) விவர அட்டவணை XXIV இல், பத்தி 9—இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் சிறுவர்கள் பணியமர்த்தப்படுதல்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பணியமர்த்தப்படுதல்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) ‘‘பெண் தொழிலாளர்கள்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண் தொழிலாளர்கள்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(17) விவர அட்டவணை XXVஇல், பத்தி 9—இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் மீதான தடை’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(18) விவர அட்டவணை XXVII இல், பத்தி 6—இல்,

(a) ‘‘பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல் தொடர்பான’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் இளையோர் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல் தொடர்பான’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(19) விவர அட்டவணை XXVIII இல், பகுதி B—இல், பத்தி 9—இல்,

(a) ‘‘பெண்கள், இளையோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தப்படுவதை தடை செய்தல்’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள், இளையோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தப்படுவதை தடை செய்தல்’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) ‘‘யாதொரு பெண்களும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்களும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(20) விவர அட்டவணை XXIX இல், பத்தி 5—இல்,

(a) ‘‘பெண்கள் அல்லது இளையோர் பணியமர்த்தப்படுவதை தடை செய்தல் தொடர்பான’’ என்ற தலைப்புக்குப் பதிலாக, ‘‘கர்ப்பிணிப் பெண்கள் அல்லது இளையோர் பணியமர்த்தப்படுவதை தடை செய்தல் தொடர்பான’’ என்ற தலைப்பு அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்:

(b) ‘‘யாதொரு பெண்ணும்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘யாதொரு கர்ப்பிணிப் பெண்ணும்’’ என்னும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

*[அரசாணை (2ப) எண். 40, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (M1)த் துறை, 22 செப்டம்பர் 2025.]*

தமிழ்நாடு அரசு 2011 ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவு (செயலாக்கம்) விதிகளில் திருத்தம் செய்யக் கருதியதற்கிணங்க மத்திய அரசுடன் கலந்தாலோசித்து, 2009 ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/2010) 53 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (2) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு. செய்ய கருதப்பட்டுள்ள மேற்சொன்ன விதிகளுக்கான திருத்தத்தின் பின்வரும் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 53 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் கோரப்பட்டுள்ளவாறு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2 இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து பதினைந்து நாட்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர் இந்த வரைவுத் திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது. மேற்சொன்ன பதினைந்து நாட்கள் கால அளவு முடிவடைவதற்கு முன்னர் இது தொடர்பாக யாதொரு நபரிடமிருந்து வரப்பெறுகிற யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை—600 006 இல் உள்ள தொழிலாளர் ஆணையர் வாயிலாக 'அரசுச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை —600 009' என்ற முகவரிக்கு இரு படிகளில் அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், 9 ஆம் விதியைச் சேர்ந்த (3) துணை விதிக்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

“(3) துணை விதிகள் (1) மற்றும் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு வணிக நடவடிக்கைக்கு A அல்லது B வகைத் தராசு அல்லது மிகத் துல்லிய வகைப்பாட்டைச் சேர்ந்த (வகைப்பாடு II) அல்லது சிறப்புத் துல்லிய வகைப்பாட்டைச் சேர்ந்த (வகைப்பாடு I) 1 மி.கி அல்லது 1 மி.கிராமுக்கும் குறைவான சரிபார்ப்பு இடைவெளி கொண்டுள்ள தானியங்கி அல்லாத எடையளவுக் கருவி மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 116, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (K2)த் துறை, 6 அக்டோபர் 2025.]*

1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) 49 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் மேற்கொள்கிறார்.

**திருத்தங்கள்.**

மேற்சொன்ன விதிகளில்.—

(1) விதி 16—C க்கு பதிலாக, பின்வரும் விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

“16—C. வேலையளிப்பவரின் ஒருங்கிணைந்த சுய சான்றளிப்பு:— தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் சார்ந்த சேவைகள் தொடர்புடைய ஒவ்வொரு வேலையளிப்பவரும், ஒவ்வோர் அரையாண்டின் இறுதியிலும், பதிவேடுகள், பதிவுருக்கள் மற்றும் அறிவிப்புகளை வைத்து வருதல் குறித்த சான்றிதழ் ஒன்றை, படிவம் ‘O’இல் தொழிலாளர் துறையின் அங்கீகரிக்கப்பட்ட வலைவாசல் வாயிலாக இணைய வழியில் தொழிலாளர் உதவி ஆய்வாளரிடம் அளிக்க வேண்டும். ஜூன் மாதம் 30 ஆம் நாளுடன் முடிவடையும் அரையாண்டுக்கான சான்றிதழ் அந்த ஆண்டின் ஜூலை மாதம் 31 ஆம் நாளுக்கு முன்னரும், டிசம்பர் மாதம் 31 ஆம் நாளுடன் முடிவடையும் அரையாண்டுக்கான சான்றிதழ், அடுத்து வரும் ஆண்டின் ஜனவரி மாதம் 31 ஆம் நாளுக்கு முன்னரும் வழங்கப்பட வேண்டும்.”

(2) படிவம்—O க்குப் பதிலாக, பின்வரும் படிவம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

**படிவம்-O**

**[விதி 16-C- ஐக் காண்க]**

…..20……. ஆம் நாளுடன் முடிவடையும் அரையாண்டுக்கான தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் சார்ந்த சேவைகளுக்கான ஒருங்கிணைந்த சுய சான்றறிக்கை

| | | |
|---|---|---|
| 1. | தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி<br>தொலைபேசி எண் :<br>மின்னஞ்சல் முகவரி: | |
| 2. | வேலையளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி<br>தொலைபேசி எண் :<br>மின்னஞ்சல் முகவரி : | |

| | | |
|---|---|---|
| 3. | தகவல் தொழில்நுட்ப செயல்பாட்டின் தன்மை— | |
| 4. | பணியமர்த்தப்பட்ட நபர்களின் உயரளவு எண்ணிக்கை —<br>(1) ஆண்கள்:<br>(2) பெண்கள்:<br>(3) மொத்தம்: | |
| 5 | (a) பணி நேரம்:<br>அன்றாட/வாராந்திரப் பணி நேரம் தொடர்பான விதித் துறைகளுக்கு இணக்கமாகச் செயல்படுதல் (பிரிவு 14)<br>அன்றாடப் பணிநேரம்:<br>வாராந்திரப் பணிநேரம்:<br>(b) விடுப்பு:<br>பணியமர்த்தப்பட்ட நபர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு அனுமதிக்கப்படுகிறதா? | |
| 6. | படிவம் 'S' இல் உள்ள அறிவிப்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா? | |
| 7. | சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு:<br>பிரிவு 20 முதல் 23 வரையில் வரையறுக்கப்பட்டவாறாக, தீ விபத்து மற்றும் பிற சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? | |
| 8. | மேற்சொன்ன சட்டத்தில்/விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு பின்வரும் பதிவேடுகள் நாளதுவரையில் வைத்துவரப்படுகின்றனவா?<br>a) 'படிவம் U' இல் பணியாளர் பதிவேடு<br>b) 'படிவம் V' இல் வேலைவாய்ப்பு குறித்த பதிவேடு<br>c) 'படிவம் W' இல் ஊதியம் குறித்த பதிவேடு<br>d) 'படிவம் X' இல் விடுப்பு மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் குறித்த பதிவேடு | |
| 9. | கணினிமயமாக்கப்பட்ட மற்றும் மாற்றுப் படிவங்களை வைத்துவருவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதா? (விதி 16—A). ஆம் எனில், ஆணை எண் மற்றும் நாள் குறித்த விவரங்களை அளிக்கவும். | |
| 10. | 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளின் 15 ஆம் விதியில் வரையறுக்கப்பட்டுள்ளவாறாக நிறுவனத்தின் பெயர்ப் பலகை தமிழில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளதா ? | |

| | | |
|---|---|---|
| 11. | பணியாளர்களுக்கு ‘படிவம் – T’ இல் ஊதியச் சீட்டு வழங்கப்படுகிறதா? | |
| 12. | விதி 16–D இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறாக, ”படிவம் ZC” இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள் அளிக்கப்படுகிறதா? | |
| | பேறு கால பயன்கள் : | |
| 13. | தகுதிவாய்ந்த பெண் பணியாளர்களுக்கு பேறுக்கால பயன் முன்னரே வழங்கப்படுகிறதா ? | |
| 14. | அதற்கடுத்த பேறுகால பயன் வழங்கப்படுகிறதா ? | |
| 15. | மிகையூதியம் வழங்கப்படுகிறதா ? | |
| 16. | 1961 ஆம் ஆண்டு பேறுகால பயன் சட்டத்தின், (மத்தியச் சட்டம் 53/1961) 9 ஆம் பிரிவின் படி விடுப்பு ஊதியம் வழங்கப்படுகிறதா? | |
| 17. | 1961 ஆம் ஆண்டு பேறுகால பயன் சட்டத்தின், (மத்தியச் சட்டம் 53/1961) 10 ஆம் பிரிவின் படி விடுப்பு ஊதியம் வழங்கப்படுகிறதா? | |
| 18. | 1967 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேறுகால பயன் விதிகளின் 15 ஆம் விதியின் கீழ், சட்டம் மற்றும் விதிகளின் சுருக்கம் ‘படிவம் J’ இல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா? | |
| | பணிக்கொடை பயன்கள் : | |
| 19. | 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிக்கொடை வழங்கல் விதிகளின், 4 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவிப்பு ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா ? | |
| 20. | 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிக்கொடை வழங்கல் விதிகளின், 6(1) ஆம் விதியின் படி அனைத்து பணியாளர்களிடமிருந்தும் ‘படிவம் F’ இல் வாரிசு நியமனம் பெறப்பட்டு வேலையளிப்பவரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனவா ? | |
| 21. | 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணிக்கொடை வழங்கல் விதிகளின், 20 ஆம் விதியின் படி ”படிவம் U” இல் சட்டம் மற்றும் விதிகளின் சுருக்கம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா? | |
| | குறைந்தளவு ஊதியங்கள்: | |
| 22. | பணியாளர்களுக்கு 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) கீழ் நிர்ணயிக்கப்பட்டவாறான குறைந்தளவு ஊதியம் வழங்கப்படுகிறதா? | |
| 23. | 1953 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு) விதிகளின், 22 ஆம் விதியில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு ‘படிவம் X’ இல் அறிவிப்பு ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா ? | |
| | ஊதியங்கள் வழங்கல் | |

| | | |
|---|---|---|
| 24. | பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்கு, 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1936) 5 ஆம் பிரிவின்படி நடப்பு அரையாண்டில், ஊதிய கால அளவின் இறுதி நாளிற்குப் பின்னர், நேர்விற்கேற்ப, ஏழாம் நாளிற்குள் அல்லது பத்தாம் நாளிற்குள் ஊதியங்கள் வழங்கப்பட்டனவா ? | |
| 25. | 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊதியங்கள் வழங்கல் விதிகளின் 8 ஆம் விதியின் படி ஊதியம் வழங்கப்படும் நாள் குறித்த அறிவிப்பு காட்சிப்படுத்தப்படுகிறதா? | |
| 26. | பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்கு, அபராதங்கள் விதிப்பதற்கான அதிகாரத்தைக் கோருகின்ற விண்ணப்பம், 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊதியங்கள் வழங்கல் விதிகளின் 10 ஆம் விதியின் படி தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அனுப்பப்படுகிறதா? | |
| 27. | 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊதியங்கள் வழங்கல் விதிகளின், 22 ஆம் விதியில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, சட்டம் மற்றும் விதிகளின் சுருக்கம் 'படிவம் V' –இல் காட்சிப்படுத்தப்படுகிறதா? | |

வேலையளிப்பவரின் கையொப்பம்

**சான்றிதழ்**

…………. அன்று முடிவடையும் அரையாண்டில், 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 36 / 1947) மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட மேலே குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டவாறு தொடர்புடைய தொழிலாளர் சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழுள்ள அனைத்து விதித்துறைகளுக்கு நாங்கள் இணக்கமாக செயல்பட்டுள்ளோம் எனச் சான்றளிக்கப்படுகிறது.

மேற்சொன்ன சட்டங்கள் மற்றும் அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் குறித்து முழுமையாக அறிந்த பின்னர் மேற்சொன்ன சான்றிதழ் வழங்கப்படுகிறது. யாதொரு தகவலும் தவறானது எனப் பின்னர் கண்டறியப்பட்டால், நாங்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாவோம். மேலும், தவறான தகவல்களை வழங்கியதற்கு, மேற்சொன்ன சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் விதித்துறைகளின் கீழ் வழக்குத் தொடரப்படுவதற்கும் நாங்கள் உட்பட்டவராவோம்.

| | |
|---|---|
| மேலாளரின் கையொப்பம் | வேலையளிப்பவரின் கையொப்பம் |
| பெயர் : | பெயர் : |
| பதவிப்பெயர் : | பதவிப்பெயர் : |
| அலுவலக முத்திரை : | அலுவலக முத்திரை : |
| ஏற்கப்பட்டது : | நாள் : |

தொழிலாளர் உதவி ஆய்வாளர்

***கொ. வீர ராகவ ராவ்,***
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர் (கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.